<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>CC. No. 28 / 2016</u>

DW : 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பங்கஞ்குமாரசாமி | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தின் 07 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

<u>07.02.2025</u>

<u>முதல் விசாரணை</u>

நான் Bsc கெமிஸ்டி படித்துள்ளேன். நான் சைனோ பார்மா சூபிகல் லிமிடெட், பிளாட் எண் 35, 36 செக்டார் 6 ஏ, சிட்குள், ஹரித்துவார், உத்தராகாண்ட் டில் வசிக்கிறேன். நான் அங்கீகரிக்கப்பட்ட கெமிஸ்டராக மேற்கண்ட நிறுவனத்தில் வேலைபார்க்கிறேன். அதற்குரிய சான்றிதழின் சுயசான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது எமசாஆ 1 ஆகும். நான் 2008 ஆம் ஆண்டிலிருந்து கெமிஸ்டராக பணியாற்றுகிறேன். நான் எங்கள் நிறுவனத்தில் தயாரிக்கும் மருந்துகளை பரிசோதனை செய்யும் குழுவில் நானும் உள்ளேன். எனது குழுவின் தலைவர் அனில்பஹர். வழக்கு

சம்பந்தப்பட்ட நியூட்ரி ஹல் என்ற மருந்து 2015 ஜூன் முதல் 2015 நவம்பர் வரை உபயோகப்படுத்தக்கூடியது. எங்கள் நிறுவனத்தில் உள்ள சுய மெத்தேடில் தயாரிக்கப்பட்ட மருந்தாகும். Proprietary Medicine in House Method. இந்த மருந்தை சோதனைக்கு எங்களை தவிர வேறு யார் சோதனை செய்தாலும் அவர்கள் அந்த மருந்தை தயாரிக்கும் முறையையும் சோதனை செய்யும் முறையையும் எங்கள் நிறுவனத்தில் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும். எத்தனை முறைகள் மருந்து தயாரிப்பதில் உள்ளது என்றால் நாங்கள் பரிசோதனைக்கு ஒரே ஒரு முறையை (Method) ஐ தான் கடைபிடிப்போம், அது எங்கள் சொந்த முறையாகும் (Housing Method). அரசு கெமிஸ்ட் USB Method என்கிற முறையில் பரிசோதனை செய்திருக்கிறார் அது தவறாகும். USB Method க்கும் எங்களுடைய பரிசோதனை முறைக்கும் முற்றிலும் மாறுபட்டிருக்கும். Buffer and Mobile phase மேற்கண்ட முறையில் செய்யப்படுகின்ற பரிசோதனைக்கும் எங்கள் பரிசோதனைக்கும் முற்றிலும் மாறுபட்டிருக்கும். தவறான முறையில் பரிசோதனை செய்தால் தவறான முடிவுகள்தான் கிடைக்கும். இந்த பரிசோதனைக்கு மருந்துகளை உட்படுத்துவதென்றால் எங்களிடம் அரசு சார்ந்த அதிகாரிகள் பரிசோதிக்கும் முறையை கேட்பார்கள் ஏற்கனவே இதுபோல 30.01.2025 ல் மதுரையிலிருந்து அரசு பரிசோதனை கூடத்திலிருந்து எங்களிடம் பரிசோதிக்கும் முறை கேட்டு

வந்த கடிதத்தின் நகல் எமசாஆ 2 ஆகும். எங்களுடைய மாதிரிகளிலேயே எங்களுடைய மருந்துகள்வெளிச்சம் படாமல் இருக்ககூடிய குளிரூட்டப்பட்ட இடங்களில் வெளிச்சம் படாதவகையில் மருந்துகள் பாதுகாக்கப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருக்கும். அதனுடைய வெப்பநிலை 10 முதல் 25 டிகிரி செல்பிசியஸ் வெப்பநிலையில் மருந்துகள் வைக்கப்படவேண்டும். எங்களுடைய மருந்து மாதிரிகளில் ஒட்டப்பட்டுள்ள லேபிளிலில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய குறிப்புகள் எமசாஆ 3 வரிசையாகும். குறிப்பிடப்பட்ட செல்பிஷியஸ்க்கு மேல் இந்த மருந்து வைக்கப்பட்டிருந்தால் மருந்து கெட்டுப்போக வாய்ப்பு உண்டு. மேலும் உணவு அதிகாரி உணவு மாதிரி எடுக்கும்போதே எடுக்கும் இடத்தில் உள்ள சீதோஸ்தன நிலை மற்றும் சுற்றுப்புற சூழ்நிலை வெளிச்சம் குறித்த பாதுகாப்புகள், எவ்வாறு மருந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை சோதனை அறிக்கையில் குறிப்பிடவேண்டும். இந்த மருந்தை பொறுத்தவரை எங்கள் நிறுவனத்தை தவிர, எங்கள் நிறுவனத்திடமிருந்து இந்த மருந்தை விற்பனைக்கு பெற்றவர்களும், மருந்தை தங்களிடம் இருப்பு வைத்திருந்தவர்களும், விற்பனையாளர்களும் தரப்பினராக இவ்வழக்கில் வரவேண்டும். இந்த மருந்தை உணவு அதிகாரியும் பரிசோதனை செய்த கெமிஸ்ட் டும் மேற்கண்ட சீதோஷ்ண நிலையில் வைக்கவில்லை என்றால் மருந்து கெட்டுப்போக வாய்ப்பு உள்ளது. அரசு சோதனையாளர்கள் 60

நாட்களுக்குள் மருந்தை பரிசோதித்து 5 தினங்களுக்குள் அவரது அறிக்கையை சம்பந்தப்பட்டவர்களுக்கு தந்திருக்கவேண்டும். எங்களுடைய வழக்கில் குறிப்பிட்டுள்ள மருந்தை சோதனை செய்யும் முறைப்பற்றிய விவரங்கள் அடங்கிய குறிப்புகள் எமசாஆ 4 ஆகும். Buffer phase and Mobile phase இரண்டும் வெவ்வேறு முறைகளாகும். அரசு பரிசோதனை நிலையத்திலிருந்து வந்த பரிசோதனை அறிக்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு எங்களது நிறுவனத்தில் ஏற்கனவே உணவு பரிசோதனை அறிக்கையை அனுப்பியிருக்கிறோம். அது வழக்கின் கோப்பில் அசாஆ 21 ஆக உள்ளது. எங்களுடைய விற்பனை நிறுவனமான ஸ்போர்ட் பி என்ற நிறுவனம் தனக்கென தனி பரிசோதனைகூடத்தை கொண்டுள்ளது. அங்கும் இந்த மருந்து ஏற்கனவே மேற்கண்ட நிறுவனத்தால் பரிசோதிக்கப்பட்டு அதனுடைய அறிக்கையும் ஏற்கனவே எங்கள் நிறுவனத்தின்மூலம் மருந்து அதிகாரி, திருவாரூருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மருந்து தரமாக இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. அந்த அறிக்கை ஏற்கனவே அசாஆ 21 ல் உள்ளது. எங்கள் தரப்பில் எமசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட Multani Pharmaceutical Ltd நிறுவனம் எங்களது பரிசோதனை முறையை எங்களிடம் கேட்டுவாங்கி செய்த ஆய்வறிக்கையை அவர்கள் செய்த பரிசோதனைமூலம் அனுப்பியுள்ளார்கள்.

Proprietary Medicine ஐ பொருத்தவரை உற்பத்தியாளரிடம் ஆய்வு மெத்தேடை கேட்டுப்பெறாமல் செய்கிற ஆய்வறிக்கை தவறான அறிக்கையாகும்.

அரசு தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.02.07 16:42:47 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.